**OS No.42/2020**

PW 2 – ராஜு

நாள் 11.08.2025

**வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் தென்வடல் வீதியில் தெற்கே உள்ள ரயில்வே காம்பவுண்ட் இடம் வரை பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக பூமியில் பாதை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையாளர் அறிக்கையின் படி பாதை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பூமியில் பாதை இல்லை, ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் பாதை உள்ளது.

ரயில்வே காம்பவுண்ட் சுவரை தாண்டி உள்ளது ரயில்வேக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். 60 ஆண்டுகாலமாக அந்த பாதையை பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த ரயில்வே இடத்திற்குள் ரேசன் கடை உள்ளது. பொதுமக்கள் அனைவரும் இந்த பாதை வழியாக அங்கு சென்று ரேசன் பொருட்களை வாங்குவார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், வாதுரையிலும் ரேசன் கடை உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

வாதி சந்திராவிற்கும் கிழமேல் ஓடிய பொதுப்பாதையும் தென்வடல் ஓடிய பொதுப்பாதையும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றும் நான் சொல்லும் தென்வடல் பொதுப்பாதை முத்துராஜா தேவர் பட்டா இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பூமியில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தை வாதி அபகரிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கிற்கு வாதிக்கு ஆதரவாக பாதை உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 25.06.2020 ம் தேதி முதல் இந்த பிரதிவாதிகள் வாதி பயன்படுத்தி வரும் பாதையை ஆக்கிரமிப்பு செய்ய தீவிரமாக முயற்சி செய்து வருகிறார் என்று கூறியிருப்பது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்மூலத்தில் தென்வடல் வீதியில் சாக்கடை, ரோடு அமைப்பும் தற்போதும் உள்ளதாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் சொல்லும் பாதையானது முத்துராஜா தேவருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 503/2 உடன் முடிந்துவிட்டது என்றால் ருக்குமணியம்மாள் என்பவரிடன் வீட்டுடன் முடிந்துவிட்டது, புல எண் 494/20 ல் தான் 15 பொதுப்பாதை மற்றும் சக்கடை அமைப்புகள் உள்ளது. வாதியின் வீட்டிற்கு தெற்கே உள்ள காலிஇடத்தில் பாதிக்கு மேற்பட்ட இடம் ரயில்வே இடத்திற்கு சொந்தமானது பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல.

வாதி வீட்டிற்கும் காலி இடத்திற்கும் போதுமான பாதைகள் உள்ளது என்றும், வாதி பிரதிவாதிகளை அழக்கலிப்பு செய்ய வேண்டும் என்பதற்காக தாவா வழக்கை தாக்கல் செய்து அதற்கு நான் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இில்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.